மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) 1970–71-ஆம் ஆண்டில், வேலூரிலுள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு கடன் எதும் வழங்கப்படவில்லை. ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு, இந்த நிறுவனத்தால் மருத்துவ உதவி அளிக்கப்படும் வறிய நோயாளி ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு 50 காசு (ஐம்பது) வீதம் பேணுதல் மானியம், இந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. 1970–71-ம் ஆண்டுக்குள்ள பேணுதல் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: வேலூரில் உள்ள கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் யாரையும் சேர்ப்பது இல்லை என்ற புகார் வந்துள்ளதா? அப்படியிருந்தால் அரசு அதன் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மூலக் கேள்வி வறிய நோயாளிகளைப் பேணுவதற்கு பேணுதல் மானியம் அளிப்பது பற்றியது. கல்லூரியைப்பற்றியோ, மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதுபற்றியோ இதற்குரிய சம்பந்தம் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் பேணுதல் மானியம் ஒவ்வொரு நோயாளிக்கும் 50 காசு என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மானியத் தொகை சரியான முறையில் செலவிடப்படுகிறதா என்பதைப் பார்க்க நம்முடைய அரசாங்கப் பிரதிநிதி அந்த மருத்துவ நிலையத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறாரா? ஹாஸ்பிடல் கமிட்டி என்று உருவாக்கி, அதில் நமது டைய பிரதிநிதியையும் போட அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்படிப்பட்ட வறிய நோயாளிகளுக்கு பேணுதல் மானியம் முதன்முறையாக வழங்கப்பட்டபோதே ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகளின்படி எப்போது வேண்டுமானாலும் மருத்துவத் துறையின் இயக்குநர் அந்த மருத்துவ மனையைப் பார்வையிடலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. The institution should be open to periodical inspection by the D.H.S. & F.P. or other officers of the Medical Department and should be maintained to the satisfaction of the D.H.S. & F.P.' என்பது விதி. ஆகவே அந்த மருத்துவ மனை செம்மையாக நடைபெற்று வருகிறது என்ற கருத்தோடு அரசாங்கம் பேணுதல் மானியத்தை அளித்து வருகிறது.

மேற்கு இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம்

*654 வினு—திரு. எஸ். அழகுத் தேவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் விருதுநகரிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில் மேற்படி அலுவலகம் சாத்தூருக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1972 மார்ச் 23]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், விருதுநகரில் உள்ள கட்டடம், வசதிக் குறைவானதாக இருக்கிறது என்ற காரணத்தினால் விருதுநகரிலேயே வேறு ஒரு வாடகைக் கட்டடத்திற்கு மாற்றும் யோசனைதான் அரசின் பரிசீலினையில் உள்ளது.

(இ) சாத்தூருக்கு மாற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு எஸ். அழகுத் தேவர் : தலைவர் அவர்களே இந்தப் பதிவாளர் அலுவலகம் விருதுநகரில் இருக்கிறது. சாத்தூர் பெரிய தாலூகா. அந்தத் அலுவலகத்தை சாத்தூருக்கே அதை மாற்றி அமைக்க யோசிப்பார் களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, தற்போது அப்படி மாற்றும் திட்டம் எதுவும் இல்லை.

திரு சௌடி எஸ். சுந்தரபாரதி: அந்த அலுவலகத்தை வேறு எங்காவது மாற்றவேண்டுமென்ற வேண்டுகோள் வந்ததா ? அப்படியானால் அந்த வேண்டுகோளைப் பரிசீலிக்கிறபோது—இப்போதுள்ள இடமே அந்த மாவட்டத்தின் மையமாக இருப்பதனால் அந்த இடத்திலேயே இருக்க முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : யாரிடத்தில் இருந்தும் வேண்டுகோள் வரவில்லை. விருதுநகரில் இப்போதுள்ள இடம் வசதியில்லாது இருக்கிற காரணத்தினால் அதே ஊரில் வேறு வாடகைக் கட்டிடத்திற்கு அந்த அலுவலகத்தை மாற்றத்தான் யோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சாத்தூர் தாலுக்கா பெரியதாக இருக்கிறது. அந்தத் தாலுக்கா பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட முயற்சிக்கிறபோது, அந்தப் பக்க மக்களுடைய கோரிக்கையையும் கருத்தில் வைத்து சாத்தூரிலேயே கட்டடம் கட்ட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தற்போது அதற்கு விருதுநகரில் சொந்தக் கட்டடம் கட்டும் யோசனை இல்லை. வாடகைக் கட்டடத்தில்தான் மாற்றி அமைக்க இருக்கிறோம். சொந்தக் கட்டடம் கட்ட யோசிக்கும்போது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலிக்கப்படும்.

சென்னையில் அரிசி கைப்பற்று

*655 வினா—திரு என். டென்னிஸ் : மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் தேதி அளவில் வணிகர்களிடமிருந்து பெருமளவு அரிசியை காவல் துறையின் உணவுப்பிரிவு கைப்பற்றியதா ?